திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரில் உள்ள அந்த மருத்துவமனை தாலுக்கா தலைமை மருத்துவமனையாக இருப்பதால் அங்கே அதிக அளவுக்கு புற நோயாளிகள் வருகிறார்கள். இதுவரையில் அங்கே ரத்த சேமிப்பு நிலையமோ அல்லது ஸ்பெஷல் வார்டோ இல்லை. ஆகவே அவைகளை அமைக்க ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவைகள் தற்போது இல்லை. இருந்தாலும் தாலுக்கா தலைமை மருத்துவமனை என்ற காரணத்தால் இவைகளைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

விக்கிரமசிங்கபுரம் அரசு மருத்துவமனை.

163—(* வினா எண். 9666)—திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது பரிசீலனையில் இல்லை.

(முற்பகல் 10-30)

திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியில் ஏறத்தாழ 65,000 மக்கள் வசிக்கின்றார்கள். இந்த மருத்துவமனையானது குறைந்த படுக்கைகளைக் கொண்ட, சிறிய மருத்துவமனையாக இருக்கிறது. மேலும் இந்தப் பகுதியிலே தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கின்றார்கள். தனியார் மருத்துவமனை என்று இங்கு ஒரு மருத்துவமனையும் கிடையாது.

ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு, அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்த இனியாவது அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அங்கு புற நோயாளிகளுக்கு ஏற்ற படுக்கை வசதிகள் இல்லை. அதனால் படுக்கை வசதிகளை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகிரி சுமார் 1½ இலட்சம் மக்கள் தொகை கொண்ட இடம். சிவகிரி மருத்துவமனை அரசு மருத்துவ மனையாவதற்கு எல்லா மருத்துவப் பிரிவுகளும் வரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களிடம் ஏற்கனவே மனுக்கள் கொடுத்துள்ளேன். ஆகவே இந்த நிதியாண்டிலாவது எல்லா மருத்துவப் பிரிவுகளையும் அமைக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துத் தருகிறேன்.

டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் டி.எம்.ஓ. ஆபீஸ் பெரியகுளத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கு அட்மினிஸ்ட்ரேடிவ் பிளாக் ஒன்று கட்டாது இருப்பதனால் அங்குள்ள அட்மினிஸ்டிரேஷன் சரியாக இயங்காத நிலையிலுள்ளது. அந்த அட்மினிஸ்டிரேடிவ் பிளாக்கை சீக்கிரம் முடித்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி கேட்கவும்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் ஒரு பெரிய தாலுக்கா சென்டர். அங்கு 17,500 மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில், பல கிராமங்களிலிருந்து மக்கள் மருத்துவமனைக்குச்

செல்லவேண்டுமென்றால், கிட்டத்தட்ட 30 மைல் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கேயிருக்கிற அரசு மருத்துவமனை 4 படுக்கைகளைக் கொண்டது. 4 ஆண்டுகளாக விரிவுபடுத்தவேண்டுமென்று கேட்டு வருகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டிலாவது அந்த மருத்துவமனையை விரிவுபடுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விக்கிரமசிங்கபுரத்தைப் பற்றி கேள்வி கேட்டுவிட்டு, சாத்தான்குளத்தைப் பற்றிக் கேட்டால் பதில் தருவதற்கு ஏதும் விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

உத்திரமேரூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான தங்கும் விடுதி.

164—(* வினா எண். 9842)—**திரு. க. நரசிம்மபல்லவன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக தங்கும் விடுதி ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) உத்திரமேரூரில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக புதிய விடுதி தொடங்கும் உத்தேசம் ஏதுமில்லை.

திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் நிறைய பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் படிக்கின்ற காரணத்தால், மேலும் பரிசீலித்து அமைத்துத் தரவேண்டும். மேலும் விடுதியில் தங்கி படிக்கின்ற மாணவர்களின் பராமரிப்புக்காக அரசு என்ன உதவிகளைச் செய்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.